**தென்காசி நகர்மன்றத்தின்  சாதாரணக்கூட்டம் - 2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை  04.00 மணியளவில் நகர்மன்ற தலைவர் அவர்களால் நடத்தப்படவுள்ள கூட்டப்பொருள்கள் விபரம்.**

**தலைமை : திரு.ர.சாதிர் அவர்கள்.**

**பொருள் எண் : 1**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான கொசு மருந்து பைரித்ரம் மற்றும் டெமிபாஸ் மற்றும் பாசில்லஸ் துரிஞ்சியென்சிஸ் (BT) ஆகிய கொசு மருந்துகள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00லட்சத்திற்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்  YESELL CROPS CARE 4-213 (S.F.NO 112/2& 112/5 , INGUR TO PANYAMPALLI ROAD, PANAYAMPALLI PANCHAYATH, CHENNIMALAI VILLAGE PERUNDARAI TALUK, ERODE என்ற நிறுவனத்திடம் வாங்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான கொசு மருந்து பைரித்ரம் மற்றும் டெமிபாஸ் மற்றும் பாசில்லஸ் துரிஞ்சியென்சிஸ் (BT)  ஆகிய மருந்துகளை வாங்கவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் வாங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2314/2024/எச்1)**

**தீர்மானம் எண் : 771**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 2**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பரிவில் உள்ள இலகரக வாகனம் மற்றும் கனரக வாகனம் இயக்குவதற்கு ஒப்பந்தம் அடிப்படையில் ஓட்டுநர்களை பணியில் அமர்த்த நகர்மன்றத் தீர்மான எண்.760, நாள். 28.06.2024ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது.  அதன்படி 16.07.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவர் | இலகுரக வாகனம் ஒப்பந்தப் புள்ளித் தொகை நாள் ஒன்றுக்கு | கனரக வாகனம் ஒப்பந்தப் புள்ளித் தொகை நாள் ஒன்றுக்கு. |
|---|---|---|---|
| 1 | திரு. எம். சுடலைக்கனி, 2/273 முப்புடாதியம்மன் கோவில் தெரு, பாட்டப்பத்து, ஆயிரப்பேரி. | ரூ. 769/- | ரூ.820/- |
| 2 | திரு. பி. மணிகண்டன் 1/72, இந்திரா காலனி, பாட்டபத்து, ஆயிரப்பேரி. | ரூ.800/- | ரூ.900/- |

**அலுவலககுறிப்பு :**

1. மேற்படி பணிக்கு வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.எம்.சுடலைக்கனி,2/273 முப்புடாதியம்மன் கோவில்  தெரு, பாட்டப்பத்து ஆயிரப்பேரி என்பவர் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. திரு.சுடலைக்கனி என்பவருக்கு பணி உத்திரவு வழங்கப்படும் நாளியிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2022/2024/எச்1)**

**தீர்மானம் எண் : 772**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 3**

இந்நகராட்சி பகுதியில் உள்ள வாறுகால்களை புதர்களை அகற்றுவதற்கு ஜே.சி.பி. இயந்திரத்தினை வாடகைக்கு அமர்த்தவும், அதற்கான செலவினத்திற்கும் நகர்மன்றத் தீர்மான எண்.759, நாள்.28.06.2024ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் 16.07.2024அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஜே.சி.பி.இயந்திரம் கொண்டு சமப்படுத்துதல் (ஒருமணி நேரத்திற்கு ) ரூ. | ஓட்டுநர் கூலி (குறைந்தது நான்கு மணி நேரம் இயக்க வேண்டும்) நாள் ஒன்றுக்கு . |
|---|---|---|---|
| 1 | திரு.யு.முத்துக்குமார், ஒப்பந்தக்காரர் நன்னகரம். | ரூ. 1050/- | ரூ.700/- |
| 2. | திரு. எஸ்.பாலசுப்பிரமணியன், ஒப்பந்தக்காரர். கீழப்புலியூர். | ரூ.1200/- | ரூ.800/- |

**அலுவலககுறிப்பு :**

1. மேற்படி பணிக்கு வரிசை எண் 1ல் கண்டுள்ள திரு.யு.முத்துக் குமார், ஒப்பந்தக்காரர் நன்னகரம். என்ற ஒப்பந்தக்காரர் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஜே.சி.பி. இயந்திரம் வாடகைக்கு ஓராண்டிற்கு அமர்த்தி கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2021/2024/எச்1)**

**தீர்மானம் எண் : 773**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 4**

இந்நகராட்சியில் 2022-2023ம் ஆண்டிற்கான வருவாய் மூலதனநிதி ,குடிநீர் வடிகால் நிதி, மற்றும் கல்வி நிதி ஆகியவற்றின் தணிக்கை அறிக்கையினை நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.2655 /2024/எச்1)

**தீர்மானம் எண் : 774**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 5**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள 13 இலகுரக வாகனங்களில் பொது மக்களிடம் குப்பைகளை பிரித்து தர மற்றும் வர்த்தக பிரமுகர்களுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட ஒலிபெருக்கி அமைப்பு (ஆம்ப்னிபையர், ஸ்பீக்கர், ஸ்பீக்கர் கவர், பென்டிரைவுடன்) ஏற்படுத்தவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.125000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்களுக்கு ஒலி பெருக்கி அமைப்பு ஏற்படுத்தவும் அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2648/2024/எச்1)**

**தீர்மானம் எண் : 775**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 6**

அரசாணை (நிலை) எண் 62 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.17.01.1994 மற்றும் 1920ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் விதிமுறைகளின் படி தணிக்கைக் கட்டணம் 50 சதவீதம் நகராட்சியில் 2022-2023ம் ஆண்டிற்கான தணிக்கைக் கட்டணம் ரூ.87194/-ஐ அரசு தலைப்பில் செலுத்த தணிக்கை பத்தி எண்.68ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தென்காசி நகராட்சி 2022-2023ம் ஆண்டிற்கான தணிக்கைக் கட்டணம் ரூ.87194/- ஐ அரசு உரிய தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.1909/2018/எச்1)**

**தீர்மானம் எண் : 776**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 7**

தென்காசி நகராட்சியில் உள்ள பொதுசுகாதாரப் பிரிவு வாகனங்களுக்கு கருவி படி(Glopal Positioing System) புவி இடம் காட்டி பொருத்த (LCV)13 எண்ணம். மற்றும் (HCV)வாகனங்கள் 3 எண்ணம் ஆக மொத்தம் 16 வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளது. அனைத்து வாகனங்களுக்கும், புவி இடம் காட்டி(GPS) கருவி பொருத்துவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ஒரு வாகனத்திற்கு ரூ.5000/- வீதம் 16 வாகனஙகளுக்கு ரூ.80000/- செலவினம் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

புவிஇடம் காட்டி(GPS) கருவி பொது சுகாதார வாகனங்களுக்கு பொருத்துவதற்கும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2712/2024/எச்1)**

**தீர்மானம் எண் : 777**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 8**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான தளவாட சாமான்கள் விநியோகம் செய்ய மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 09.08.2024ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | பொருட்கள் விபரம் | கே. கனகசபாபதி முதலியார் சன்ஸ் , தெற்கு ஒப்பனைத் தெரு, தென்காசி. (ஜி.எஸ்.டி உட்பட ) | சக்தி அன்கோ 69, நாராயணசாமி கோவில் தெரு, இலஞ்சி. (ஜி.எஸ்.டி உட்பட ) |
|---|---|---|---|
| 1 | பெரிய கைமாறு | ரூ.450 | ரூ. 477 |
| 2 | மண்வெட்டி(கம்பு வகை) | ரூ 848 | ரூ 870 |
| 3 | வாறுகால் கரண்டி ( 5அடி) | ரூ 705 | ரூ 730 |
| 4 | கடப்பாரை | ரூ 1950 | ரூ 2100 |
| 5 | இரும்பு சட்டி (பெரியது) | ரூ 460 | ரூ 490 |
| 6 | ஒட்டடை கம்பு ( கம்பி பிடியுடன்) | ரூ 260 | ரூ 280 |
| 7 | 4 முள் போர்க் | ரூ 830 | ரூ 860 |

**அலுவலககுறிப்பு :**

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் கே.கனகசபாபதி முதலியார் சன்ஸ், தெற்கு ஒப்பனைத் தெரு, தென்காசி என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளது.

எனவே மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.878/2024/எச்1)**

**தீர்மானம் எண் : 778**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 9**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள (INDOOR FOGGING MACHINE) ரிப்பேர் பணிகள் மேற்கொள்ள 05.07.2024 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| SL.NO | REPAIR DETAILS | A.BALASUBRAMANINAN Fogging Machine Service Centre, (All Kinds Of Fogging Machine Services ) Main Road Ambasamudram | MANIKANDAN FOGGING MACHINE (All Kinds Of Fogging Servies ) Main Road Madurai. |
|---|---|---|---|
| 1 | காயில் | 1550 | 1650 |
| 2 | பர்னர் | 850 | 1050 |
| 3 | கேஸ் மிஷின் சுவிட்ச் | 800 | 900 |
| 4 | வால்வு | 150 | 250 |
| 5 | சைலன்ஸர் வெல்டிங் | 1850 | 2050 |
| 6 | பணியாளர் கூலி | 800 | 1000 |

மேற்படி விலைப்புள்ளிகளில் A.BALASUBRAMANINAN FOGGING MACHINE SERVICE CENTRE, (ALL KINDS OF FOGGING MACHINE SERVICES) MAIN ROAD AMBASAMUDRAM என்ற நிறுவனம் குறைவான விலைப்புள்ளிகள் கொடுத்துள்ளது.

**அலுவலககுறிப்பு :**

மேற்படி நிறுவனத்தின் குறைவான விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2051/2024/எச்1)**

**தீர்மானம் எண் : 779**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 10**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2.0 திட்டதின்படி நடைமுறை கட்டணமில்லா தொலை தொடர்பு எண்.14420 ஐ செயல்படுத்தப்பட்டதற்கு திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் எண். 859/2022/பி1 நாள். 27.06.2024ன் மற்றும் 19.07.2024ன் படி கட்டணமில்லா தொலை தொடர்பு எண்ணிற்கு ரூ.4660/-யும். அதில் பணியாற்றி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு ரூ.60,600/- என நிர்ணயம் செய்தும் மேற்படி தொகைகளை சம்பந்தப்பட்ட வங்கி கணக்கில் செலுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தென்காசி நகராட்சிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையான ரூ. 4660/- மற்றும் ரூ.60,600/- ஆக மொத்தம் ரூ.65260/-ஐ செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

மேற்படி தொகையினை செலவினம் மேற்கொள்ளவும், சம்பந்தப்பட்ட வங்கி கணக்கில் செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2026/2022/அ2)**

**தீர்மானம் எண் : 780**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 11**

இந்நகராட்சியில் 2017ம் ஆண்டு முதல் குடிநீர் இணைப்பு வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும் UTIS மூலம் மேற்கொள்ளப்படுகிறது. 2017ம் ஆண்டுக்கு முன்னர் பல்வேறு ஆண்டுகளில் குடிநீர் இணைப்புக்காக வங்கி மற்றும் நகராட்சியில் குடிநீர் இணைப்பு வைப்புத்தொகை ரூ.6000/ வீதம் பல நபர்களால் செலுத்தப்பட்டுள்ளது. புதிதாக குடிநீர் இணைப்பு பெறும் போது மீண்டும் வைப்புத்தொகை ரூ.6000/ செலுத்த வேண்டியுள்ளது. இதனால் ஒரு குடிநீர் இணைப்பிற்கு இருமுறை வைப்புத்தொகை பெறப்படுகிறது. எனவே UTISக்கு முன்னர் குடிநீர் இணைப்பு வேண்டி செலுத்தியுள்ள குடிநீர் இணைப்பு வைப்புத்தொகைகளை திருப்பி வழங்கக்கோரி விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. விண்ணப்பதாரர்கள் அளிக்கும் விண்ணப்பத்தின் பேரில் வைப்புத்தொகைகளை பதிவேட்டில் இருப்பிலுள்ள தொகையினை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு திருப்பு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2026/2022/அ2)**

**தீர்மானம் எண் : 781**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 12**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட தினசரி சந்தை கடை எண்18ஐ திரு.எம்.கணேஷ் என்பவர் குத்தகை உரிமம் அனுபவித்து வந்தார். அன்னார் 31.03.2024 முடிய வாடகை நிலுவையின்றி செலுத்தியுள்ளார். மேற்படி கடை இடிக்கப்பட்டதால் அன்னார் பெயரிலுள்ள வைப்புத்தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். திரு.எம்.கணேஷ் என்பவர் பெயரில் தினசரி சந்தை கடை எண்18ற்கு செலுத்திய இருப்பிலுள்ள வைப்புத்தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2026/2022/அ2)**

**தீர்மானம் எண் : 782**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 13**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பழைய பேருந்து நிலைய கடை எண்4ஐ திரு.எம்.காதர்பாட்சா என்பவர் குத்தகை உரிமம் அனுபவித்து வந்தார். அன்னார் கடையை நடத்த இயலாது என தெரிவித்து நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார்.மேற்படி கடையினை உரிமம் ஒப்படைப்பு செய்ய ஏல நடவடிக்கையில் உள்ளது. திரு.எம்.காதர்பாட்சா என்பவர் மேற்படி கடையினை உரிமம் அனுபவிக்க இந்நகராட்சியில்

செலுத்தியுள்ள வைப்புத்தொகையினை திருப்ப வழங்க கோரியுள்ளார். அன்னார் பெயரில் இருப்பிலுள்ள வைப்புத்தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2026/2022/அ2)**

**தீர்மானம் எண் : 783**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 14**

இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய கடை எண்.39ஐ குத்தகை உரிமம் அனுபவித்து வந்த திருமதி.சுப்புலெட்சுமி என்பவர் கடையினை நடத்த இயலவில்லை என தெரிவித்து கடையை நகராட்சிக்கு ஒப்புடைப்பு செய்துள்ளார். வருவாய் ஆய்வாளர் தனது 21.06.2024ம் தேதிய அறிக்கையில் மேற்படி கடையினை பூட்டி சீல் செய்து உள்ளார் என அறிக்கை செய்து உள்ளார்.எனவே மேற்படி கடையினை பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும் கடை திரு.இராமகிருஷ்ணன் பெயரில் உள்ளது. ஆனால் வைப்புத்தொகை பதிவேட்டில் (திருமதி.சுப்புலெட்சுமி பெயரில் உள்ளது) வைப்புத்தொகையில் அன்னார் செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஈடு செய்து மீதமுள்ள வைப்புத்தொகையினை திருப்பி வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2026/2022/அ2)**

**தீர்மானம் எண் : 784**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 15**

இந்நகராட்சி ஆடறுவைக்கூடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மன்றத்தீர்மானம் எண்.659, நாள்.16.02.2024ன் படி மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. மேற்கண்ட தீர்மானத்தின்படி 2024 – 2025 ம் ஆண்டு ஆடறுவைக்கூடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை. இந்நிலையில் பாராளுமன்றத்தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தால் தேர்தல் நன்னடத்தை விதிகள் முடியும் வரை கடந்த ஆண்டு (2023–2024) குத்தகைதாரர் திரு.இஸ்மத் என்பவருக்கு உரிமம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி ஆடறுவைக்கூடத்தில் பராமரிப்பு பணிகள் முடிவடையாததால் கடந்த ஆண்டு குத்தகைதாருக்கு நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று மீண்டும் 3 மாதங்களுக்கு உரிமம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ)அவசர அவசியம் கருதி நகராட்சி நிதியிழப்பினை தவிர்க்கும்பொருட்டு நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று பழைய குத்தகைதாரர் திரு.இஸ்மத் என்பவருக்கு உரிமம் நீட்டிப்பு செய்து வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2026/2022/அ2)**

**தீர்மானம் எண் : 785**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 16**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கீழ்கண்ட இனங்களை குத்தகை உரிமம் ஒப்படைக்க கடந்த சில ஆண்டுகளாக பலமுறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் எவரும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை. மேலும் இறுதியாக 14.08.2024ம் தேதி மறு ஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி எவரும் கலந்து கொள்ளவில்லை என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | குத்தகை / உரிமத்தின் விபரம் |
|---|---|
| 1 | தலைமை தபால் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள நவீன குளியல் அறை கட்டணம் மற்றும் கழிப்பிடத்தில் கட்டணம்(ரூ.5) வசூல் செய்யும் உரிமம் |
| 2 | வார்டு எண் 23 புலிக்குட்டி விநாயகர் கோவில் தெருவில் உள்ள நகராட்சி கட்டண கழிப்பிடத்தில் (ரூ.5) கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 3 | வார்டு எண் 8உச்சிமாகாளியம்மன் கோவில் தெருவில் உள்ள நகராட்சி கட்டண கழிப்பிடத்தில் (ரூ.5) கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 4 | வார்டு எண் 33 குலசேகர நாதர் கோவில் தெருவில் உள்ள நகராட்சி கட்டண கழிப்பிடத்தில்கட்டணம்(ரூ.5) சூலிக்கும் உரிமம் |
| 5 | புதிய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப்பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் |

**அலுவலக்குறிப்பு :**

மன்றம் முடிவு செய்யலாம்

**(ந.க.எண்.2026/2022/அ2)**

1. மேற்படி நான்கு கழிப்பறைகளும் பலமுறை ஏலம் கோரியும் ஏலம் போக காரணத்தினாலும் மேற்படி கழிப்பறை பகுதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகமில்லாத காரணத்தினாலும் அந்தந்த வார்டுகளில் அல்லது அதன் அருகில் உள்ள சுயஉதவிக்குழுக்கள் மூலம் 2024-25 முதல் 2026-27 வரையிலான காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மற்றும் இதர பணிகளை மேற்கொண்டு சுயஉதவிக்குழுக்களை நடத்தி கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**2.** புதிய பேருந்து நிலையத்திலுள்ள தொலைபேசி மூலம் விளம்பரம் செய்யும் ஏலத்திற்கு பலமுறை ஏலம் கோரியும் எவரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் டிஜிட்டல் மூலம் விளம்பரம் செய்யும் உரிமம் ரூ.2,00,000/-ற்கு வழங்கப்பட்டுள்ளதால் 2024-25 முதல் 2026-27 வரையிலான காலத்திற்கு ஏல நடவடிக்கையில் இருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

**தீர்மானம் எண் : 786**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 17**

இந்நகராட்சியின் 2023-2024ஆம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள் (வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, கல்வி நிதி) UTIS Software மூலம் முடித்து சரிபார்த்து கணக்கு சமர்ப்பிக்கப்பட்ட வகைக்கு Consultancy Charges ரூ.75000/-ஐ வழங்க கேட்டு திரு.ஆ.ராஜாமணி என்பவரிடமிருந்து பட்டியல் வரப்பெற்றது. பட்டியலில் கண்ட தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியின் கீழ் செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.786/2024/பி1)**

**தீர்மானம் எண் : 787**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 18**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 மதுரை ரோடு (மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள தெரு) சிமெண்ட் தளக்கற்கள் பழுதடைந்து பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு பழுதடைந்த சிமெண்ட் தளகற்கள் சாலையினை மறுசீரமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 788**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 19**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2ல் கீழ்காண்டவாறு பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத் தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.2, ஹவுசிங் போர்டு காலனியில் சிறுபாலம் அமைக்கும் பணி | 1.00 |
| 2. | வார்டு எண்.2, ஹவுசிங் போர்டு காலனியில் உள்ள தெருக்களில் பழுதடைந்துள்ள சாலைகளை பேட்ச் ஒர்க் செய்தல் பணி | 6.00 |

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 789**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 20**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3 மங்கம்மா சாலையில் உள்ள தெரு குண்டும் குழியுமாக உள்ளதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமமாக உள்ளது. ஆகவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்காணும் பகுதியில் ரூ.3.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் சிமெண்ட் தளக்கற்கள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 790**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 21**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4 இரயில்வே மேட்டு தெருவில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து இருக்கும் காரணத்தினால் அப்பகுதியில் உள்ள கழிவுநீர் சரிவர வெளியேறாமல் சாலையில் ஆங்காங்கே தேக்கமடையும் சூழ்நிலையில் இருப்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையுள்ளது. எனவே மேற்படி பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்கண்ட பழுதடைந்த மழைநீர் வடிகாலினை மறுசீரமைத்து பராமரிக்கும் பணி மேற்கொளள் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 791**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 22**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5 களக்கோடி தெருவில் உள்ள சாலை சேதமடைந்து போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமமாக உள்ளது. ஆகவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்காணும் பகுதியில் ரூ.5.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 792**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 23**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6ல் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாததால் அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க இயலாத நிலை உள்ளது. ஆகவே அப்பகுதி மக்களுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்கும் பொருட்டு புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கவும் மற்றும் சுகாதார வளாகம் பராமரிப்பு பணிகள் செய்யவும் ரூ.2.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2809/2024/இ1)**

**தீர்மானம் எண் : 793**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 24**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 நேரு தெருவில் உள்ள சமுதாய நலக்கூடத்தின் மேற்கூரை தரைதளம் உடைப்பு ஏற்பட்டு பழுதடைந்து மழைநீர் கசிவு ஏற்படுகிறது. ஆகவே பழுதடைந்துள்ள மேற்கூரையில் உள்ள தரைதளம் சீரமைக்கும் பணிகள் மற்றும் உச்சிமாகாளியம்மன் கோவில் 3ம் தெருவில் மழைநீர் வடிகால் மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.3.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 794**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 25**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8 உச்சிமாகாளியம்மன் கோவில் 5ம் தெருவில் உள்ள சாலை சேதமடைந்து உள்ளதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமமாக உள்ளது. ஆகவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்காணும் பகுதியில் ரூ4.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 795**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 26**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9 பாறையடி தெருவில் உள்ள சிமெண்ட் தளக்கற்கள் சாலை பழுதடைந்த நிலையில் உள்ளதால் மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு ரூ5.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 796**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 27**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11 ஆபாத் பள்ளிவாசல் தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து கழிவுநீர் வெளியறாமல் ஆங்காங்கே தேங்கியுள்ளதால் சுதார சீர்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ3.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 797**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 28**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12 LRS பாளையம் மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து கழிவுநீர் வெளியறாமல் ஆங்காங்கே தேங்கியுள்ளதால் சுதார சீர்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 798**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 29**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 கீழவாலிபன்பொத்தையில் உள்ள தெரு மகிவும் சேதமடைந்து போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமமாக உள்ளது. ஆகவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்காணும் பகுதியில் ரூ6.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் சிமெண்ட் தளக்கற்கள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 799**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 30**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14 அரசூர் நங்கையம்மன் கோவில் உள்ள தெருவில் புதிதாக 3 எண்ணம் பாலங்கள் அமைக்கவும், பழுதடைந்துள்ள சிமெண்ட் தளக்கற்கள் சாலையினை மறுசீரமைத்தல் பணியினை ரூ5.00 உத்தேச மதிப்பீட்டில் அமைக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 800**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 31**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15ல் அரிப்புக்கார பகுதியில் உள்ள தெருவில் சேதமடைந்து போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமமாக உள்ளது. ஆகவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்காணும் பகுதியில் ரூ.2.50 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் சிமெண்ட் தளக்கற்கள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 801**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 32**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16 கன்னிமாரம்மன் கோவில் தெருக்களில் மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து கழிவுநீர் வெளியறாமல் ஆங்காங்கே தேங்கியுள்ளதால் சுதார சீர்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 802**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 33**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17 ஐவராஜா கோவில் தெரு மற்றும் நடுமாதங்கோவில் பகுதியில் உள்ள தெருக்களில் ரூ2.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் புதிதாக 2 எண்ணம் சிறுபாலங்கள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 803**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 34**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 நடுப்பேட்டை பகுதியில் மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்து கழிவுநீர் வெளியறாமல் ஆங்காங்கே தேங்கியுள்ளதால் சுகதார சீர்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 804**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 35**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19ல் உள்ள பகுதியில் சிமெண்ட் தளக்கற்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு ரூ3.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 805**

அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**பொருள் எண் : 36**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 20 செய்யது குருக்கள் பள்ளிவாசல் பகுதியில் சிறுபாலம் மற்றும் சிமெண்ட் சாலை மிகவும் சேதமடைந்து அப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மற்றும் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் சிரம்மாக உள்ளது. ரூ3.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் சிறுபாலம் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 806**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 37**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 21 சொர்ணபுரம் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து கழிவுநீர் சரியாக வெளியேறாமல் ஆங்காங்கே தேக்கமடைந்து சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு பழுதடைந்த மழைநீர் வடிகாலினை மறுசீரமைத்து பராமரிப்பு செய்யும் பணியினை ரூ3.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 807**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 38**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 22 உச்சிமாகாளியம்மன் கோவில் 1ம் தெருவில் உள்ள சாலை மிகவும் சேதமடைந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும், மிகுந்த சிரமமாக உள்ளது. ஆகவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்காணும் பகுதியில் ரூ2.50 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 808**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 39**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24 புதுமனை 3ம் தெரு உள்ள சிமெண்ட் சாலை மற்றும் மிகவும் மழைநீர் வடிகால் சேதமடைந்து கழிவுநீர் சரிவர வெளியேறாமல் சாலையில் ஆங்காங்க தேக்கமடைந்து சுகாதார சீர்கேடு ஏறபடும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி தெருவில் உள்ள மழைநீர் வடிகாலினை மறுசீரமைப்பு செய்யவும் மற்றும் புதிதாக சிமெண்ட் சாலை அமைக்கவும் ரூ3.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 809**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 40**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25 சிதம்பரேஸ்வரர் கோவில் தெருவில் உள்ள சிமெண்ட் சாலை சேதமடைந்து போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமமாக உள்ளது. ஆகவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்காணும் பகுதியில் ரூ.3.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 810**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 41**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26 கீழப்பாளையம் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்து கழிவுநீர் சரிவர வெளியேறாமல் சாலைகளில் தேக்கமடையும் நிலை உள்ளது. எனவே மேற்படி பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு மேற்படி பழுதடைந்த மழைநீர் வடிகாலினை சரிசெய்யும் பணியினை ரூ.3.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 811**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 42**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27 நயினார் தெருவில் உள்ள சிமெண்ட் தளக்கற்கள் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலனை கருத்தில் கொண்டு ரூ.3.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 812**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 43**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.28 தெற்கு ஒப்பனை பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள சிமெண்ட் தளக்கற்கள் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலனை கருத்தில் கொண்டு சிமெண்ட் தளக்கற்கள் சாலையினை மறுசீரமைத்தல் பணி மேற்கொள்ளவும், புதிதாக 2 சிறுபாலங்கள் அமைக்கவும் ரூ.3.50 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 813**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 44**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.29ல் உள்ள 7வது நகராட்சி நடுநிலைப்பள்ளியில் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் பள்ளிகூட வகுப்பறை கூடுதலாக கட்ட வேண்டியுள்ளது. எனவே கல்வி கற்கும் மாணவ மாணவியர்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி பள்ளியில் புதியதாக கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.19.00 இலட்சம் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2810/2024/இ1)**

**தீர்மானம் எண் : 814**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 45**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30 தெற்குமாசி தெருவில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து கழிவுநீர் நிரம்பி சரியாக வெளியேறாமல் ஆங்காங்கே தேக்கமடைந்து சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலினை சரிசெய்யும் பணியினை ரூ.3.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 815**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 46**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.31 சிந்தாமணி பகுதியில் உள்ள தெருக்களில் சிறுபாலம் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை ரூ.3.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 816**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 47**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.32 சம்பா தெரு பகுதியில் உள்ள தெருக்களில் 2 சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை ரூ.3.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 817**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 48**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.33ல் கீழமுத்தாரம்மன் கோவில் தெருவில் உள்ள சாலை மிகவும் சேதமடைந்து போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமமாக உள்ளது. ஆகவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்காணும் பகுதியில் ரூ.4.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் சிமெண்ட் தளக்கற்கள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 818**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 49**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அங்கீகரிக்கப்படாத மனைகளில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு இதுநாள் வரை வழங்கப்படவில்லை. மேலும் இந்திய அரசியலமைப்பு சரத்து 21 வாழ்வதற்கான உரிமையில் குடிநீர் மற்றும் மின்சாரம் ஒரு மனிதனின் அடிப்படை கடமையாக வலியுறுத்தியுள்ளது. ஆகையால் பொதுமக்களிடமிருந்து அங்கீரிக்கப்படாத மனைகளில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் வழங்குமாறு மக்களின் முதல்வர் திட்டம் மற்றும் முதலமைச்சர் தனிப்பிரிவு ஆகியவைகளிலிருந்து மனுக்கள் அதிகமாக வரப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்பொழுது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ல் பிரிவு 351(1)ல் சொத்துவரிகளுக்கு மிகாமல் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும். சொத்துவரி விதிக்கப்பட்ட கட்டிடங்களுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கலாம் என்று குறிப்பிடுகிறது. ஆகையால் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் வழங்க பகிர்மான குழாய் இல்லாத இடங்களுக்கு பகிர்மான குழாய் பதிக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.19.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2809/2024/இ1)**

**தீர்மானம் எண் : 819**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 50**

இந்நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவ மாணவியர்களுக்கு நவீன முறையில் கல்வி கற்க ஏதுவாக கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Supply, Delivery, Installation, Testing and Commissioning of Digital E Learning Table at 7th Ward Municipal Middle School | 5.70 |
| 2 | Supply, Delivery, Installation, Testing and Commissioning of Digital E Learning Table at 9th Ward Municipal Middle School | 5.70 |
| 3 | Supply, Delivery, Installation, Testing and Commissioning of Digital E Learning Table at 13th Ward Municipal Middle School | 5.70 |

மேற்படி பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடுகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2810/2024/இ1)**

**தீர்மானம் எண் : 820**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 51**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆவணங்கள் மற்றும் கோப்புகள் பல்வேறு அளவுகளின் நகல்கள் எடுக்க வெளி இடத்திற்கு சென்று நகல் எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வெளி இடங்களுக்கு கொண்டு செல்லப்படும் கோப்புகள் மற்றும் ஆவணங்கள் தவறுவதற்கு வாய்ப்புள்ளது. மேலும் இதனால் காலவிரயம் அதிகப்படியாக ஆகின்றது. எனவே இதனை கருத்தில் கொண்டு இந்நகராட்சி அலுவலகத்திற்கு புதியதாக ஜெராக்ஸ் இயந்திரம் ஒன்று வாங்க உத்தேச செலவு தொகை ரூ2.95 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 821**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 52**

இந்நகராட்சி அலுவலகத்தில் தற்போது அனைத்துவிதமான செயல்பாடுகளும் கணிணி மூலம் மின்னனுமயமாக்கப்பட்டு பல்வேறு சேவைகள் பொதுமக்களுக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோர்கள் காணொளி காட்சி மூலம் பல்வேறு ஆய்வு கூட்டங்கள் நடத்தி வருகின்றார்கள். நகராட்சி அலுவலகத்தில் இணைய பயன்பாட்டில் உள்ள வயர்கள் பொருத்தப்பட்டு பல ஆண்டு ஆகிவிட்டபடியால் பழுதடைந்து தற்போது உள்ள பயன்பாட்டிற்கு தேவையான அளவு வேகம் இணைய இணைப்பில் இல்லாததால் கோப்புகள், ஆவணங்கள் பதிவேற்றம் மற்றும் இனைய வழி வேலைகள் சரியாக நடைபெறாமல் அவ்வப்போது தடை ஏற்படுகிறது. எனவே இதனை கருத்தில் கொண்டு நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து கணிணிகளுக்கும் Internet Cable பொருத்த தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 822**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 53**

இந்நகராட்சி அலுவலகத்தில் பொதுப்பிரிவில் நகராட்சி மூலம் செயல்படுத்தபடும் அனைத்து பணிகளுக்கான கோப்புகள் மற்றும் ஆவணங்கள் அந்தந்த பிரிவிற்கான அலுவலர்கள் மூலம் பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. தற்போது கணிணி மூலம் மின்னனு சேவைகளும் செயல்படுத்தப்பட்டு வருவதால் அலுவலர்களுக்கு தேவையான மேஜை மற்றும் அலமாரிகள் புதிதாக அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே நகராட்சி அலுவலர்களுக்கு தேவையான மர மேஜை மற்றும் அலமாரிகள் பொதுபிரிவில் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 823**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 54**

தென்காசி நகராட்சி எல்லைக்குடபட்ட புதிய பேரூந்து நிலையத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-23ம் ஆண்டின் கீழ் அறிவுசார் மையம் அமைக்கும பணி நடைபெற்று வருகிறது. பணி முடிவடைந்து திறக்கும் தருவாயில் உள்ளதால் மாவட்ட ஆடசியர் அவர்களின் ஆய்வின் போதும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வின் போதும் மதிப்பீட்டில் இல்லாத மின்விசிறி, மின்விளக்கு, Teak Wood SS Post with Disigner Glass மற்றும் Glass Door அமைக்க அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ19.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.
1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்
3 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 824**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 55**

தென்காசி நகராட்சி எல்லைக்குடபட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்பட்டு அதன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும் தென்காசி நீரேற்றும் நிலையத்திலிருந்து தென்காசி நகர் பகுதிக்குள் பதிக்கப்பட்டுள்ள பிரதான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் கசிவுகளை சரிசெய்ய நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே பராமரிப்பு பணிகள் தனியார் மூலம் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ20.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.
1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி குடிநீர்ப் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்
3 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2809/2024/இ1)**

**தீர்மானம் எண் : 825**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 56**

தென்காசி நகராட்சி எல்லைக்குடபட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோக செய்வதற்கு தலைமை நீரேற்றும் நிலையம் அமைந்துள்ள ஊர்க்காட்டிலிருந்து தென்காசி நீரூந்து நிலையம் வரையிலான 40.20 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோக பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்பட்டு அதன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யவும் மேற்படி நீளத்திற்கு பதிக்கப்பட்டுள்ள பிரதான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் கசிவுகளை சரிசெய்யம் நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியின் ஒப்பந்தக்காலம் 31.10.2023ல் முடிவடைகிறது. எனவே மேற்படி பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் கசிவுகளை சரிசெய்ய தனியார் மூலம் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ20.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1, மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி குடிநீர்ப் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

3 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2809/2024/இ1)**

**தீர்மானம் எண் : 826**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 57**

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2024-25ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.770 நாள் 28.06.2024ம் தேதியன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 17.07.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக பகிர்மானக் குழாய் அமைக்கப்பட்டுள்ளதற்கு இரண்டு குழாய் திருப்பனர்கள் மூலம் இயக்குதல் மற்றும பராமரித்தல் | 2.45 | திரு G.சோமசுந்தரம் ஒப்பந்தக்காரர் | 0.15%குறைவு |
| | | | திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 4.45%கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.15% குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருG.சோமசுந்தரம் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2809/2024/இ1)**

**தீர்மானம் எண் : 827**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 58**

தென்காசி நகராட்சியில் பொது நிதி 2024-25ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 748 நாள் 28.06.2024ம் தேதியன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 17.07.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தென்காசி நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆணையாளர், பொறியாளர், உதவி பொறியாளர், சுகாதார அலுவலர் ஆகியோர்களின் அறைகளில் மர அலமாரிகள் தடுப்பு சுவர் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | 5.00 | திரு S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர் | 0.06%குறைவு |
| | | | திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 3.20%கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.06% குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருS.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 828**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 59**

தென்காசி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023-24ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர்/தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்: COLRD/2872/2023-A3 நாள் 03.10.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிக்கு 02.08.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் / நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 27ல் போர்வெல் அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 3.00 | திரு அப்துல் ரஷீத் ஒப்பந்தக்காரர் | 0.02% குறைவு |
| | | | திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர் | 3.20% கூடுதல் |
| 2 | வார்டு எண் 20ல் போர்வெல் அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 3.00 | திரு அப்துல் ரஷீத் ஒப்பந்தக்காரர் | 0.02% குறைவு |
| | | | திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர் | 3.20% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிகளுக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.அப்துல்ரஷீத் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். /2024/இ1)**

**தீர்மானம் எண் : 829**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 60**

தென்காசி நகராட்சியில் குடிநீர்நிதி 2024-25ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள் 17.07.2024ல் அனுமதி வழங்கப்பட்ட பணிக்கு 02.08.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் / நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | ஊர்க்காடு தலைமை நீரூந்து நிலையத்திலிருந்து தென்காசி நீரூந்து நிலையம் வரை உள்ள பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்தல் மற்றும் பராமரித்தல் | 20.00 | திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.05% குறைவு |
| | | | திரு S.சுடலைமுத்து ஒப்பந்தக்காரர் | 2.20% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.S.முருகன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2809/2024/இ1)**

**தீர்மானம் எண் : 830**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 61**

தென்காசி நகராட்சியில் குடிநீர்நிதி 2024-25ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள் 17.07.2024ல் அனுமதி வழங்கப்பட்ட பணிக்கு 02.08.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் / நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தென்காசி நீரூந்து நிலையத்திலிருந்து நகர்பகுதிகளுக்குள் வரை உள்ள பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்தல் மற்றும் பராமரித்தல் | 20.00 | திரு S.முருகன் ஒப்பந்தக்காரர்<br>திரு S.சுடலைமுத்து ஒப்பந்தக்காரர் | 0.05% குறைவு<br>3.30% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.S.முருகன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2809/2024/இ1)**

**தீர்மானம் எண் : 831**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 62**

தென்காசி நகராட்சியில் கல்வி நிதி 2024-25ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள் 17.07.2024ல் அனுமதி வழங்கப்பட்ட பணிக்கு 02.08.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் / நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | புதிய பேரூந்து நிலையத்தில் உள்ள அறிவுசார் மைய கட்டிடத்திற்கு மின்விசிறி, மின்விளக்கு, Teak Wood SS Post with Disigner Glass மற்றும் Glass Door அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல். | 19.00 | திரு S.ராவீன் ஒப்பந்தக்காரர்<br>திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரர் | 0.05% குறைவு<br>2.20% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.S.ராவீன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2810/2024/இ1)**

**தீர்மானம் எண் : 832**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 63**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10ல் உள்ள தெருவில் மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து கழிவுநீர் சரியாக வெளியேறாமல் ஆங்காங்கே தேக்கமடைந்து சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு பழுதடைந்த மழைநீர் வடிகாலினை மறுசீரமைத்து பராமரிப்பு செய்யவும் மற்றும் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை ரூ.3.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 833**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 64**

இந்நகராட்சி பகுதி வார்டு எண்.33, கீழப்பாளையம் பகுதியில் இந்நகராட்சி மூலம் அமைக்கப்பட்டு வரும் புதிய தினசரி சந்தையில் அமையவிருக்கும் வணிகவளாகம் பிரதான நுழைவாயில் மற்றும் மேற்கு நோக்கி அமையவிருக்கும் கடைகளின் நுழைவாயில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதால் அதனை மாற்றம் செய்யக்கோரி திரு.E.தனராஜ், த/பெ.இருளப்பன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.14879/2024க்கு இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டு வழக்கினை தள்ளுபடி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு வழக்கு கட்டணம் ரூ.10,000/-ஐ திரு.P.ஆதிமூலப்பாண்டியன், வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2190/2024/இ1)**

**தீர்மானம் எண் : 834**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 65**

இந்நகராட்சி பகுதி வார்டு எண்.30, வடக்குமாசிவீதியில் உள்ள தண்ணீர்தொட்டி கட்டிடம் மிகவும் சேதமடைந்து ஆங்காங்கே வெடிப்புகள் ஏற்பட்டு இடிந்து விழக்கூடிய நிலையில் இருந்ததாலும் மற்றும் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளதை கருத்திற் கொண்டும், பழைய தொட்டியினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு அதனருகிலேயே புதிதாக சிறுமின்விசைபம்புடன் கூடிய தண்ணீர் தொட்டி அமைப்பதை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.ஆறுமுகம் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு WP(MD)No.14437/2024க்கு இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டதற்கும் மற்றும் வழக்கினை நடத்துவதற்கும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/-ஐ திரு.P.ஆதிமூலப்பாண்டியன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2170/2024/இ1)**

**தீர்மானம் எண் : 835**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 66**

இந்நகராட்சி பகுதி வார்டு எண்.21 சொர்ணபுரம் தெருவில் உள்ள ஆடறுப்பு மனை பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்திவிட்டு அப்பகுதியில் புதிதாக ஆடறுப்புமனை அமைக்கும் பணியினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.பஷீர்அகமது (எ) பஷீர் முகமது என்பவர் WP(MD)No.18954/2024 ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்காணும் வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலப்பாண்டியன் அவர்கள் ஆஜராகி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மற்றும் அதற்கான செலவினத்தொகைக்கும் மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2615/2024/இ1)**

**தீர்மானம் எண் : 836**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 67**

இந்நகராட்சி குடிநீர் பிரிவில் இயங்கும் ஈப்பு வாகனம் எண்.TN76 AA 3493 வாகனத்திற்கு புதிதாக 4 எண்ணம் டயர்கள் ரூ.35000/- உத்தேச மதிப்பீட்டில் வாங்கி பொருத்தும் பணிக்கு இந்நகர்மன்ற தலைவர் அவர்கள் 01.07.2024 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தகுதி பெற்ற நிறுவனங்களிடம் 05.07.2024 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் (ம) முகவரி | (விலை விகிதம்) ரூ. |
|---|---|---|
| 1. | DTR Traders,<br>Tirunelveli- Tenkasi Main Road,<br>Near Kamarajar New Vegetable Market,<br>Pavoorchatram-6278008. | ரூ.30,000/- |
| 2. | RAJAS Wheel Alignment and Tyres,<br>10/1038A, Tirunelveli Main Road,<br>Pavoorchatram,<br>627808 | ரூ.32,000/- |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள DTR Traders, Tirunelveli- Tenkasi Main Road, Near Kamarajar New Vegetable Market, Pavoorchatram என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளிளை ஒப்புக்கொண்டு இந்நகராட்சி குடிநீர் பிரிவில் இயங்கும் ஈப்பு TN76 AA 3493 வாகனத்திற்கு புதிதாக 4 எண்ணம் டயர்கள் வாங்கி பொருத்தவும் அதற்கான செலவின தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.687/2024/இ1)

**தீர்மானம் எண் : 837**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 68**

இந்நகராட்சி அலுவலக பிரிவுகளில் பராமரிக்கப்படும் பிரிண்டர்களை பழுதுகள் நீக்கம் செய்யவும் மற்றும் கணினி பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் புதியதாக ரூ.158000/- உத்தேச மதிப்பீட்டில் வாங்கி விநியோகம் செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தலைவர் அவர்கள் 01.07.2024 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 05.07.2024 அன்று தகுதிபெற்ற நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் விபரப்படி மூன்று விலைப்புள்ளிகளில் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பணிகளின் விபரங்கள் | AJ PRINTEC SYSTEMS, 324, P.A.C.R.Road, CKN Computer Backside, Rajapalayam (ஒன்றுக்கு விலை விகிதம்) | ISR COPIER, 108, Railway Feeder Road, Tenkasi (ஒன்றுக்கு விலை விகிதம்) | CKN COMPUTERS, 138, First Floor, Sattur Road, Srivilliputhur. 322, P.A.C.R.Salai, Rajapalayam (ஒன்றுக்கு விலை விகிதம்) |
|---|---|---|---|---|
| 1. | HP Laser Jet Pro 400 | 6300 | 8750 | 8450 |
| 2. | HP Laser 403 | 6400 | 8750 | 8450 |
| 3. | HP Laser 405 | 6000 | 9400 | 9600 |
| 4. | HP Laser 202 | 6400 | 8750 | 8450 |
| 5. | Samsung M-207 | 8500 | 6900 | 6600 |
| 6. | Samsung X Pro M-207 | 6300 | 8400 | 8300 |
| 7. | Epson 300 (3 Nos) | 15900 | 18000 | 19500 |
| 8. | Toner 405 – 77A | 9600 | 9800 | 10200 |
| 9. | Toner Samsung M2071-101 | 6300 | 4270 | 4210 |
| 10. | Toner HP Laser 400-280 | 7450 | 7650 | 7600 |
| 11. | Toner HP 202-88A | 4000 | 6650 | 6700 |
| 12. | Epson Dot Matrix Cartridge | 350 | 475 | 425 |
| | | 83500 | 97795 | 98485 |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள AJ PRINTEC SYSTEMS, 324, P.A.C.R.Road, CKN Computer Back side, Rajapalayam என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளிளை ஒப்புக்கொண்டு இந்நகராட்சி அலுவலக பிரிவுகளில் பராமரிக்கப்படும் பிரிண்டர்களை பழுதுகள் நீக்கம் செய்யவும் மற்றும் கணினி பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் வாங்கி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவின தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலக பிரிவுகளின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியத்தை கருத்திற் கொண்டு நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பழுதடைந்த நிலையிலுள்ள பிரிண்டர்களை பழுதுகள் நீக்கம் செய்யவும் மற்றும் கணினி பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் வாங்கி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1789/2024/இ1)

**தீர்மானம் எண் : 838**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 69**

இந்நகராட்சி தென்காசி – திருநெல்வேலி மெயின் ரோடு நடுபல்க் தென்புறம் தேசிய நெடுஞ்சாலைத்துறை மூலம் சிறுபாலம் அமைக்கப்படும் இடத்தில் தேங்கியுள்ள மற்றும் வரப்படும் கழிவுநீரினை உறிஞ்சு குழாய்கள் மற்றும் மின் மோட்டார் கொண்டு கழிவுநீரினை அகற்றும் பணியினை அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி ரூ.33500/- உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள 07.06.2024 அன்று நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் 11.06.2024 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் (ம) முகவரி | ஒரு மின்மோட்டார் மற்றும் உறிஞ்சு குழாய் மூலம் மழைநீரினை அகற்றும் பணி நாள் ஒன்றுக்கு (விலை விகிதம்) ரூ. |
|---|---|---|
| 1. | திரு.S.அருணாசலம்,<br>ஒப்பந்ததாரர்,<br>கீழப்புலியூர், தென்காசி. | 3300/- |
| 2. | திரு.S.முருகன்,<br>ஒப்பந்ததாரர்,<br>கீழப்புலியூர், தென்காசி. | 3500/- |
| 3. | திரு.சுடலைமுத்து,<br>ஒப்பந்ததாரர்,<br>கீழப்புலியூர், தென்காசி. | 3800/- |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.S.அருணாசலம் என்ற ஒப்பந்ததாரர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவினத்தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியத்தை கருத்திற் கொண்டு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்காணும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவினத் தொகைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1744 /2024/இ1)**

**தீர்மானம் எண் : 839**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 70**

இந்நகர்மன்ற தீர்மான எண்.550, நாள்.10.11.2023ன் படி இந்நகராட்சி அலுவலகத்தில் பயன்பாட்டிற்காக Desktop கணினிகள் 29 எண்ணம், Laser Printers 26 எண்ணம், Scanners 4 எண்ணம், Web Camera Speaker 3 Set ஆகியவைகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்காணும் சாதனங்கள் அவ்வப்போது பழுதுகள் ஏற்பட்டு வருவதை உடனுக்குடன் சரிசெய்ய ஆண்டு பராமரிப்பு மூலம் (Annual Maintenance Cost) பணிகள் செய்ய திரு.A.ஷேக்அப்துல்காதர் Magic Computers, Amman Sannathi First Floor, Tenkasi என்பவருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள வரப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ‘’திரு.M.ஷேக்அப்துல்காதர், Magic Computers, 49A, Amman Sannathi First Floor, Tenkasi’’ என்பவருக்கு பதிலாக தவறுதலாக திரு.A.ஷேக்அப்துல்காதர் Magic Computers, Tenkasi என்று நகர்மன்றத்தில் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே தவறுதலாக

உள்ள திரு.A.ஷேக்அப்துல்காதர் Magic Computers, 49A, Amman Sannathi First Floor, Tenkasi'' என்பவருக்கு பதிலாக ''திரு.M.ஷேக்அப்துல்காதர், Magic Computers, 49A, Amman Sannathi First Floor, Tenkasi'' என பெயர்மாற்றம் செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1913/2024/இ1)**

**தீர்மானம் எண் : 840**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 71**

இந்நகராட்சி அலுவலக வரிவசூல் மையத்தில் இயங்கிவரும் Numeric 5KV Online UPS Power Supply Board முற்றிலும் பழுதடைந்து சரிசெய்ய முடியாத நிலையில் உள்ளதால் அதனை மாற்றி புதியதாக Power Supply Board வாங்கி பொருத்தவும் மற்றும் வரிவசூல் மையத்தில் உள்ள 1.5 டன் அளவு கொண்ட குளிர்சாதன இயந்திரம் (AC) பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்து கேஸ் நிரப்பும் பணியினை ரூ.75000/- உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணிக்கு இந்நகர்மன்ற தலைவர் அவர்கள் 01.07.2024 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 05.07.2024 அன்று தகுதிபெற்ற நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் விபரப்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பணிகளின் விபரங்கள் | MAGIC computers , 49A, 1st Floor Amman Sannathi, Tenkasi (ஒன்றுக்கு விலை விகிதம்) | Empire Print Technology, 123, Mathina complex, Perumal Kovil Street, Bharathan Theatre South, Tenkasi (ஒன்றுக்கு விலை விகிதம்) |
|---|---|---|---|
| 1. | Numeric 5 KVA Online UPS Power Supply Board | 24000 | 27000 |
| 2. | 12000 V DC Condenser | 4770 | 4950 |
| 3. | 18000 V DC Condenser | 6500 | 6900 |
| 4. | Service Charges for UPS | 7500 | 8000 |
| 5. | AC Replace of Air Filter, Gas Filling, Sensor Board, Copper wire and Water Pipe with Service Charges | 15300 | 16400 |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள MAGIC COMPUTERS , 49A, 1st Floor Amman Sannathi, Tenkasi என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஒப்புக்கொண்டு இந்நகராட்சி வரிவசூல் மையத்தில் இயங்கிவரும் Numeric 5KV Online UPSக்கு Power Supply Board முற்றிலும் பழுதடைந்து சரிசெய்ய முடியாத நிலையில் உள்ளதால் அதனை மாற்றி புதியதாக Power Supply Board வாங்கி பொருத்தவும் மற்றும் வரிவசூல் மையத்தில் உள்ள 1.5 டன் அளவு

கொண்ட குளிர்சாதன இயந்திரம் (AC) பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்து கேஸ் நிரப்பும் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவின தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியத்தை கருத்திற் கொண்டு நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வரிவசூல் மையத்தில் உள்ள** Numeric 5KV Online UPS Power Supply Board **புதிதாக வாங்கி பொருத்தவும் மற்றும்** 1.5 **டன் அளவு கொண்ட குளிர்சாதன இயந்திரம்** (AC) **பழுதுநீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும், அதற்கான செலவின தொகைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.**

(**ந.க.எண்**.1585/2024/**இ**1)

**தீர்மானம் எண் : 841**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 72**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவுகளையும் சேர்த்து மொத்தம் 28 எண்ணம் கணினிகள் இயங்கி வருகிறது. மேற்காணும் கணினிகளில் Antivirus மென்பொருள் இல்லாத காரணத்தினால் கணினிகளிலுள்ள அனைத்து பதிவுகளும் அழிந்துவிடும் அபாயம் உள்ளதால் அவசர அவசியம் கருதி Quick Heal என்ற Antivirus மென்பொருள் பதிவேற்றம் செய்யவும் அதற்கான செலவினத்தொகை ரூ.55000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

**மன்றம் அனுமதிக்கலாம்**

(**ந.க.எண்.1913/2024/இ**1)

**தீர்மானம் எண் : 842**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 73**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் 2024-2025ம் ஆண்டுக்கான வரி மற்றும் வரியில்லா இனங்களில் 100% சதவீதம் வசூல் இலக்கினை அடைய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க பொதுமக்களுக்கு வழங்ககூடிய கேட்பு அறிவிப்புகள் அலுவலகத்தில் பிரிண்ட் செய்தால் அதிக செலவு செய்ய நேரிடும் என்பதால் கணினி பதிவுகளை CDயில் பதிவு செய்து வெளிநிறுவனம் மூலம் ஜெராக்ஸ் எடுக்கும் வகைக்கு உத்தேச செலவுத்தொகை ரூ.1,50,000/-க்கு அனுமதியும், அவசர அவசியம் கருதி 16.07.2024ம் தேதியன்று விலைப்புள்ளியும் கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை |
|---|---|---|
| 1. | பொதிகை ஜெராக்ஸ்,<br>கீழமுத்தாரம்மன் கோவில் தெரு,<br>தென்காசி | பக்கம் ஒன்றுக்கு ரூ.2.50 |
| 2. | ஸ்ரீ சிவசக்தி ஜெராக்ஸ்,<br>372, கன்னிமாரம்மன் கோவில் தெரு,<br>தென்காசி. | பக்கம் ஒன்றுக்கு ரூ.2.00 |
| 3. | நந்தினி ஜெராக்ஸ்,<br>128C-2, அணைக்கரை தெரு,<br>தென்காசி | பக்கம் ஒன்றுக்கு ரூ.2.30 |

**அலுவலககுறிப்பு :**

1. மேற்படி ஜெராக்ஸ் எடுக்கும் வகைக்கு உத்தேச செலவுத்தொகை ரூ.1,50,000/-க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் கண்ட உரிமையாளர் இசக்கியம்மாள், ஸ்ரீசிவசக்தி ஜெராக்ஸ் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1341/2024/அ1)**

**தீர்மானம் எண் : 843**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 74**

இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.31, கதவு எண்.342A/K1A சிந்தாமணியில் அமைந்துள்ள அருள்மிகு சாஸ்தா பாலா உடையார் திருக்கோவில் பொதுமக்கள் வழிபடும் பொது வழிபாட்டு தலமாக பயன்படுத்தப்பட்டு வருவதால், அக்கட்டிடத்திற்கு சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2731/2024/அ1)**

**தீர்மானம் எண் : 844**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 75**

தென்காசி நகராட்சி பகுதியில் உள்ள தெருக்களில் சுற்றி திரியும் மாடுகளால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறு ஏற்பட்டு அவ்வப்போது விபத்து ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே பொதுமக்கள் மற்றும் வாகன போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் மாடுகளை பிடித்து தென்காசி யானைபாலம் அருகில் குடில் அமைத்து அவற்றினை கட்டி வைக்கவும். இந்நகராட்சிக்கு சொந்தமான வாய்க்கால்பாலம் நீரூந்து நிலையத்தில் சுகாதார பிரிவு 4க்கான தற்காலிக அலுவலகம் அமைக்கவும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு
1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2808/2024/இ1)**

**தீர்மானம் எண் : 845**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 76**

தென்காசி நகராட்சி பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு தாமிரபரணி ஆற்றுபடுகையில் உள்ள ஊர்க்காடு தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து 45.00 இலட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு தென்காசி நீருந்து நிலையம் வழியாக தினமும் மலையான் தெரு, ஆபாத் பள்ளிவாசல், ஆசாத் நகர் மற்றும் அப்துல்கலாம் நகர் ஆகிய பகுதிகளில் தலா ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் சேகரிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது உள்ள மக்கள் தொகைகேற்ப தாமிரபரணியிலிருந்து பெறப்படும் குடிநீரினை சேகரித்து சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு ஆபாத் பள்ளிவாசல் தெருவில் 5.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி புதிதாக அமைக்க ரூ150.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2822/2024/இ1)**

**தீர்மானம் எண் : 846**

அனுமதிக்கப்பட்டது.

நகர்மன்றதலைவர்,
தென்காசி நகர்மன்றம்.